**ஜூலை – 14**

# TNPSC துளிகள்

- இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கிடையேயான வர்த்தகப் பிரச்சினைகள் உடனடியாகத் தீர்க்கப்படவில்லையெனில் இந்தியாவிற்கு எதிரான "301 விசாரணை" துவக்கப்படுவது குறித்து அமெரிக்கா ஆராயும் என்று அமெரிக்க வர்த்தகத்திற்கானத் துணைப் பிரதிநிதி அறிவித்துள்ளார்.
  - "301 விசாரணை" என்பது ஒரு நாட்டிற்கு எதிராக அதிக வரிகள் மற்றும் பிற கடுமையான வர்த்தக நடவடிக்கைகளை எடுப்பதற்கு முன்பாக அமெரிக்காவினால் நடத்தப்படும் ஒரு விசாரணையாகும்.
- இந்திய நாட்டில் 10.38 கோடிக்கும் மேற்பட்ட மூத்த குடிமக்கள் வாழ்கின்றனர். உத்தரப் பிரதேசத்தில் 1.54 கோடி மூத்த குடிமக்கள் உள்ளனர். இதற்கு அடுத்து மகாராஷ்டிராவில் 1.11 கோடி மூத்த குடிமக்கள் உள்ளனர்.
  - வயது முதிர்வு தொடர்பான பிரச்சனைகளால் பாதிக்கப்பட்டுள்ள வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள மூத்த குடிமக்களுக்காக ராஷ்ட்ரிய வயோஸ்ரீ யோஜனா என்ற ஒரு திட்டம் 2017 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப் படுகின்றது.
- மூன்றாம் பாலினத்தவர்கள், தாங்களாகவேப் பதிவு செய்து பல்வேறு அரசுத் திட்டங்களின் பயன்களைப் பெறுவதற்காக ஒரு கைபேசி செயலியை அறிமுகப்படுத்த தமிழ்நாடு சமூக நல மற்றும் சத்துணவுத் துறை அமைச்சகம் பரிந்துரைத்துள்ளது.

# தேசியச் செய்திகள்

## தேசியப் பசுமைத் தீர்ப்பாயம்

- "தானாக முன் வந்து" (Suo moth) வழக்கினை எடுத்து விசாரிக்கும் அதிகாரம் தேசியப் பசுமைத் தீர்ப்பாயத்திற்கு (NGT - National Green Tribunal) உள்ளதா என்பது குறித்து ஆய்வு செய்ய இந்திய உச்ச நீதிமன்றம் ஒப்புக் கொண்டுள்ளது.
- NGT என்பது பல்துறைப் பிரச்சனைகள் தொடர்பான சுற்றுச்சூழல் பிரச்சினைகளைக் கையாளுவதற்குத் தேவையான வல்லுநர்களைக் கொண்ட ஒரு சிறப்பு அமைப்பாகும்.
- இது தேசியப் பசுமைத் தீர்ப்பாயச் சட்டம், 2010-ன் கீழ் 2010 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது.
- உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டம், 1908-ன் கீழ் உரிமையியல் நீதிமன்றத்திற்கு உள்ள அனைத்து அதிகாரங்களையும் NGT பெற்றுள்ளது.
- இது சுற்றுச்சூழல் தொடர்பான பிரச்சினைகள் குறித்து எழும் அனைத்து உரிமையியல் வழக்குகளின் மீதும் நேரடி அதிகார வரம்பைக் கொண்டுள்ளது.

## வேளாண் வணிக மேம்பாட்டு மையம்

- சத்தீஸ்கரின் ராய்ப்பூரில் உள்ள இந்திரா காந்தி வேளாண் பல்கலைக் கழகத்தில் மத்திய வேளாண் துறை அமைச்சகத்தினால் ஒரு வேளாண் வணிக மேம்பாட்டு மையம் அமைக்கப்பட்டுள்ளது.
- இது "ராப்தார்" (RAFTAAR) என்ற தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ் விவசாயத்தின் பல்வேறு துறைகளில் உள்ள தொடக்க நிலை நிறுவனங்களுக்காக இளைஞர்கள் மற்றும் தொழில் முனைவோர்களுக்கு தொழில் நுட்பம் மற்றும் உள்கட்டமைப்பு சார்ந்த பயிற்சி வழங்கப்படவிருக்கின்றது.

# சர்வதேசச் செய்திகள்

## ரோஹிங்கியா அகதிகள்

- ரோஹிங்கியா அகதிகள் மியான்மர் நாட்டிற்குத் திரும்பிச் சென்ற பின் பயன்படுத்துவதற்காக அந்நாட்டு அரசிற்கு முன்கூட்டியே கட்டி முடிக்கப்பட்ட 250 வீடுகளை இந்தியா வழங்கியுள்ளது.
- 2017 ஆம் ஆண்டில் இந்தியா ரோஹிங்கியா மக்களின் மறுவாழ்விற்காக 5 ஆண்டு காலத்திற்கு 25 மில்லியன் அமெரிக்க டாலர்களைச் செலவிட உறுதி எடுத்திருந்தது.
- மியான்மர் அரசின் இன அழித்தொழிப்பின் காரணமாக ஏறத்தாழ 7,00,000 ரோஹிங்கியா முஸ்லீம்கள் வங்க தேசத்திற்கும் அதனைத் தொடர்ந்து இந்தியாவிற்கும் இடம் பெயர்ந்தனர்.

## புதிய வட கொரிய அரசியலமைப்பு

- புதிய வட கொரிய அரசியலமைப்பானது கிம் ஜாங் உன்னை "வட கொரிய நாட்டின் தலைவர்" என்றும் "இராணுவப் படைத் தலைவர்" என்றும் அதிகாரப் பூர்வமாக அறிவித்துள்ளது.
- இதற்கு முந்தைய அரசியலமைப்பானது கிம் ஜங் உன்னை நாட்டின் ஒட்டுமொத்த இராணுவத்திற்குத் தலைமை வகிக்கும் "தலைமைத் தளபதி" என்று மட்டுமே குறிப்பிட்டிருந்தது.
- இந்தப் பெயர் மாற்றமானது வட கொரியாவின் அமெரிக்காவுடனான அமைதி உடன்படிக்கையின் முன்னோட்டமாகக் கருதப்படுகின்றது.

## இலங்கையில் தட்டம்மை ஒழிப்பு

- உலக சுகாதார அமைப்பினால் (World Health Organization) மிகவும் தொற்று ஆபத்துடைய "தட்டம்மை" நோயற்ற நாடாக இலங்கை அறிவிக்கப்பட்டுள்ளது.
- இலங்கையில் தட்டம்மை நோயானது கடைசியாக 2016 ஆம் ஆண்டு மே மாதத்தில் பதிவு செய்யப்பட்டது.
- சமீப காலத்தில், அமெரிக்கா மற்றும் ஐரோப்பா நாடுகளில் தட்டம்மை நோய்

மீண்டும் எழுச்சி பெற்றுள்ளது.

# பொருளாதாரச் செய்திகள்

## வெளிநாட்டுச் சந்தையிலிருந்து கடன் வாங்குதல்

- மத்திய அரசு, தனது மொத்தக் கடன் வாங்கலின் ஒரு பகுதியை வெளிநாட்டுச் சந்தையிலிருந்து வாங்க முடிவு செய்துள்ளது.
- இதுவரை, இந்திய அரசு உள்ளூர் சந்தையில் மட்டுமே பத்திரங்களை வெளியிட்டு வந்தது.
- இது தற்பொழுது வெளிநாட்டில் அரசின் உரிமை பெற்ற பத்திரங்களை வெளியிடத் திட்டமிட்டுள்ளது.
- குறிப்பிட்ட கால வட்டி உத்தரவாதங்களைச் செலுத்துவதற்கான உறுதி மொழியுடன் அரசாங்கம் பத்திரங்களை வெளியிடுகின்றது. இந்திய அரசு அப்பத்திரங்களின் முதிர்வுத் தேதியில் பத்திரத்தின் முழு மதிப்பையும் திருப்பிச் செலுத்துகின்றது.

### *நன்மைகள்*

- வெளிநாட்டுச் சந்தையில் கடன் வாங்குதலானது வலிமையான ரூபாய்க்கு வழிவகுக்கும்.
- அரசாங்கம் இறக்குமதியைக் கட்டுப்படுத்த முயற்சிக்கும் நேரத்தில் ஒரு வலிமையான ரூபாயானது இறக்குமதியை ஊக்கப்படுத்தும்.

## இந்தியா - ஆசியான் முக்கூட்டு வர்த்தக அமைச்சர்கள் சந்திப்பு

- விரிவான பிராந்தியப் பொருளாதாரக் கூட்டுறவு (Regional Comprehensive Economic Partnership - RCEP) மீதான அதிகாரப் பூர்வமற்ற கலந்தறிதலுக்காக இந்தியா - ஆசியான் முக்கூட்டு வர்த்தக அமைச்சர்கள் சந்திப்பு புது தில்லியில் நடத்தப் பட்டது.
- இந்தச் சந்திப்பானது மத்திய வணிக & தொழில் துறை மற்றும் இரயில்வே துறை அமைச்சரான பியூஷ் கோயலால் கலந்து கொள்ளப்பட்டது.
- இந்தியப் பொருட்களுக்கு சீனாவுடனான சந்தை அணுகல் பிரச்சினைகள் மிகக் குறிப்பாக சிக்கலானவை என்று அவர் அங்கு வலியுறுத்தினார்.
- RCEP என்பது பின்வருவனவற்றிற்கிடையே பரிந்துரைக்கப்பட்ட ஒரு வர்த்தகத் தடையற்ற ஒப்பந்தமாகும்.
    - தென்கிழக்கு ஆசிய நாடுகள் கட்டமைப்பின் (Association of Southeast Asian Nations - ASEAN) 10 உறுப்பினர் நாடுகள் (புருனேய், கம்போடியா, இந்தோனேஷியா, லாவோஸ், மலேசியா, மியான்மர், பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து, வியட்நாம்).
    - ஆசியாவில் தற்பொழுதுள்ள வர்த்தகத் தடையற்ற ஒப்பந்தங்களைக் கொண்ட இந்தோ - பசிபிக் நாடுகள் (சீனா, ஜப்பான், தென் கொரியா, இந்தியா, ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து).

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## தேனியில் நியூட்ரினோ ஆய்வு மையம்

- தமிழ்நாட்டின் தேனி மாவட்டத்தில் உள்ள பொட்டிபுரத்தில் இந்தியாவின் நியூட்ரினோ ஆய்வு மையத்தைக் (India-based Neutrino Observatory) கட்டமைப்பதற்கான ஒரு திட்டத்திற்கு இந்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- இத்திட்டம் 51,000 டன்கள் எடை கொண்ட இரும்பு கலோரிமீட்டர் உணர்த்துக் கருவியை அமைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஒரு மலையில் 2 கிலோ மீட்டர் சுரங்கப் பாதையின் முடிவில் இருக்கும் ஒரு குகையில் இயற்கையாக நிகழும் வளிமண்டல நியூட்ரினோக்களை இது கண்காணிக்கும்.
- நிலத்தின் மேற்பரப்பில் காணப்படாத காஸ்மிக் கதிர்களிலிருந்து வெளி வரும் இரைச்சலைக் குறைப்பதற்காக நிலத்திற்கடியிலான கண்காணிப்பு மையமாக இது கட்டமைக்கப்படுகின்றது.
- தற்பொழுது இந்தியாவில் எந்தவொரு பகுதியிலும் நியூட்ரினோ கண்காணிப்பு மையம் இல்லை.
- இதே வகையைச் சேர்ந்த முதலாவது மையம் INO ஆகும்.
- மேலும் இது குறித்த தகவல்களுக்கு இங்கே சொடுக்கவும்:
- https://www.tnpscthervupettagam.com/neutrino-observatory/.

## சந்திரயான் 2 சோதனைக்காக சேலம் மண்

- பூமியின் மீது சந்திரயான் 2 என்ற விண்கலத்தின் தரையிறங்கும் கலம் மற்றும் நடமாடும் ஆய்வுக் கருவி ஆகியவற்றின் சோதனைக்காக தமிழ்நாட்டின் சேலத்தில் இருந்து மணலை எடுத்து ஒரு 'உருவகப்படுத்தப்பட்ட மேற்பரப்பை' V.R. ராவ் செயற்கைக் கோள் மையம் உருவாக்கியுள்ளது.
- இது செயற்கைக் கோள்களைக் கட்டமைத்தல் மற்றும் செயற்கைக் கோள் தொழில்நுட்பங்கள் சார்ந்தவற்றை மேம்படுத்துதல் ஆகிய பணிகளை மேற்கொள்வதற்கான இஸ்ரோவின் ஒரு முதன்மை மையமாகும்.
- இது 1972 ஆம் ஆண்டில் பெங்களூருவில் அமைக்கப்பட்டது.

### *சேலம் மண் எதற்கு?*

- நிலவில் உள்ளதைப் போன்றவாறே இருக்கும் மண் அமைப்பு, வெப்பநிலை, குறைந்த ஈர்ப்புத் தன்மை மற்றும் அதே அளவிலான சூரிய ஒளி கொண்ட மண்ணானது இஸ்ரோவிற்குத் தேவைப்பட்டது.
- சேலத்தின் சித்தம்பூண்டி மற்றும் குன்னமலை கிராமங்களிலிருந்து "அனார்த்தோசைட் பாறைகள்" நொறுக்கப்பட்டு அவை நிலவின் மண் போன்று உருவகப்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்பட்டது.
- நிலவின் நடமாடும் கருவி இந்த மண்ணில் வைத்து சோதனை செய்து பார்க்கப்பட்டது.

## இணக்கமான நேரப் பகிர்வு அமைப்பு

- தனிப்பட்ட கணினி மற்றும் கணினிக் கடவுச் சொல்லுக்கு வழி வகுத்த இணக்கமான நேரப் பகிர்வு அமைப்பில் (CTSS - Compatible Time-Sharing System) பணியாற்றிய பெர்ணான்டோ கோர்பேட்டோ என்பவர் தனது 93 வயதில் காலமானார்.
- CTSS ஆனது வெவ்வேறு இடங்களில் உள்ள பல பயனர்களை ஒரே நேரத்தில் ஒரே கணினியைத் தொலைபேசி இணைப்புகள் மூலம் அணுக அனுமதிக்கின்றது.
- இது 1960 மற்றும் 1970 ஆண்டுகளின் காலகட்டத்தில் அமெரிக்காவின் எம்ஐடி கணக்கீடு மையத்தில் மேம்படுத்தப்பட்டது.
- CTSS ஆனது 1980களில் மேலும் நவீன எம்எஸ் - டாஸ் அமைப்புகளுக்கும் (MS-DOS), இன்று பயன்பாட்டில் உள்ள நவீன விண்டோஸ் மற்றும் இயங்குதள நடைமுறைகளுக்கும் (OSYxS – ஒஎஸ்எக்ஸ்) வழிவகுத்தது.

## இரஷ்யாவின் ஸ்பெக்டர் - ஆர்ஜி தொலைநோக்கி

- ஜெர்மனியுடன் இணைந்து ஸ்பெக்டர்-ஆர்ஜி என்ற ஒரு விண்வெளித் தொலைநோக்கியை கஜகஸ்தானின் பைக்கானூரில் உள்ள விண்கல மையத்திலிருந்து இரஷ்யா ஏவியுள்ளது.
- இது கருந்துளைகள், நியூட்ரான் நட்சத்திரங்கள் மற்றும் காந்தப் புலம் ஆகியவற்றை கண்காணிக்கும் பணியை மேற்கொள்ளும் ஒரு விண்வெளி கண்காணிப்பு மையமாகும்.
- இந்தத் தொலைநோக்கியானது இரஷ்யாவின் "ஹபிள் தொலைநோக்கி" என்று அழைக்கப்படுகின்றது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## எலேக்டோரோர்னிஸ் செங்குங்கிப் பறவை

- காலில் நீண்ட கட்டை விரலைக் கொண்டு இருக்கும் மறைந்து போன பறவையான எலேக்டோரோர்னிஸ் செங்குங்கி என்ற பறவை குறித்த ஆய்வுக் கட்டுரை தற்போதைய உயிரியியல் என்ற பத்திரிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது.
- 2014 ஆம் ஆண்டில் இந்தப் பறவையின் புதை படிவங்கள் மியான்மரின் குக்காங் பள்ளத்தாக்கில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
- இது வழக்கத்துக்கு மாறாக காலில் நீண்ட கட்டை விரலைக் கொண்ட தனித்துவம் வாய்ந்தப் பறவையாக 99 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்துள்ளது.
- இதன் காலில் இருக்கும் நீண்ட கட்டை விரல் கொண்ட அமைப்பானது தற்பொழுது உயிர் வாழும் மற்றும் மறைந்து போன இதர பறவைகளில் கண்டறியப்படவில்லை.

- - - - - - - - - - - - - - -